Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR 66/2026

ஆயர் சுற்று மடல்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருள் தந்தையர்களே, துறவறதாரே மற்றும் இறை மக்களே நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருளும் தந்தையாம் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஏப்ரல் மாதம் இறையழைத்தல் மாதம். கிறிஸ்துவின் பாடுகள் இறப்பு மற்றும் உயிர்ப்பின் நினைவை கொண்டாடும் இம்மாதத்தில் பாஸ்கா இரவுணவு வேளையில் அவர் நிறுவிய குருத்துவத்தை கொண்டாடுவதோடு அதற்கான அழைத்தலின் மாதமாக இம்மாதத்தை கடைபிடித்து தந்தையின் திராட்சை தோட்டத்தில் கிறிஸ்துவோடு சேர்ந்து பணி செய்ய வேலையாட்களை தாரும் ஆண்டவரே என்று செபிக்க வேண்டிய மாதம்.

"பின்பு, ஏலி சாமுவேலை நோக்கி "சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ, 'ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்' என்று பதில் சொல்" (1சாமு 3, 9). என்று கூறி ஆண்டவரின் குரலுக்கு செவிமடுக்கவும் பதில் அளிக்கவும் கற்றுகொடுத்த ஏலியை போல நமது பிள்ளைகளுக்கும் நாம் கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு மிகவும் முக்கியமாக நாம் செய்ய வேண்டியது சாமுவேலின் தாய் செய்த மிக சிறந்த செயல். "நான் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறேன். அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன்" (1சாமு 1, 28). என்ற அன்னாவைபோல நம் பிள்ளைகளை ஆண்டவருக்கு அரப்பணிக்கப்பட்டவர்களாக வளர்த்த தீருமானிப்போம். அவ்வாறு இயேசுவின் சீடர்களாக ஏராளம்பேர் உருவெடுக்கட்டும்.

இறையழைத்தலை ஊக்கப்படுத்த மறைமாவட்டம் ஏறெடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் முழு ஒத்துழைப்பு கொடுக்க முன்வருவோம். இறையழைத்தல் வார செபங்கள் செபித்து இறையழைத்தல் முகாம்களுக்கு நமது பிள்ளைகளை அனுப்பி வைப்போம். இறையழைத்தலுக்கு ஆர்வம் காட்டும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவோம்.

இறையழைத்தல் மாதம் ஏப்ரல் 5 ம் தேதி உயிர்ப்பு ஞாயிறு திருப்பலிக்குபின் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பிக்கவும் இறையழைத்தலுக்கான செபம் ஒவ்வொருநாளும் திருப்பலிக்குபின் செபிக்கவும் உங்களை கேட்டுக்கொள்கிறேன். வந்துபாருங்கள் ஆயத்த நிகழ்வுகள் ஏப்ரல் 17 மற்றும் 18 தியதிகளில் நடைபெறுகிறது அதில் 9 முதல் 12 வரை

படிக்கும் ஆண்பிள்ளைகளை அனுப்பி வைக்க உங்களை கேட்டுக்கொள்கிறேன். மே 5 முதல் 8 வரை நடைபெறும் இறையழைத்தல் முகாமுக்கு ஆர்வமுள்ள பிள்ளைகளை அனுப்பி வைக்கவும் உங்களை நினைவூட்டுகிறேன்.

இந்த புனித வாரத்தில் திங்கள் மற்றும் செவ்வாய் நாள்களில் நம்முடைய இறையியல் படிக்கின்ற குரு மாணவர்கள் அவர்களுடைய சிறு பட்டங்களை பெற்றுக்கொள்கிறார்கள். நம்முடைய வாறுதட்டு பங்கை சார்ந்த அருள் சகோதரர் டிவின் ராஜ் அவர்கள் இந்த ஆண்டு திருத்தொண்டராக உயர்த்தப்படுகிறார். மேலும் இந்த ஆண்டு உயிர்ப்பு பெருநாள் முடிந்த உடனையே நம்முடைய மூன்று திருத்தொண்டார்கள் குருவாக திருநிலைபடுத்தப்படவிருக்கிறார்கள். திருத்தொண்டர் பிபின் கே.ஜே, திருத்தொண்டர் பிபின் வேட்டகோணம், திருதொண்டர் டோனி மேத்யூ கல்லும்பரம்பில் ஆகியோர் தக்கலைமறை மாவட்டத்திற்காக குருவாக அருள்பொழிவு செய்யப்படுகின்ற இந்த நாளிலே நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்கவும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்பொழுது நம்முடைய மறைமாவட்டத்தின் இளம் குருத்துவ கல்லூரியில் சிறிதளவு மாணவர்களே எண்ணிக்கையில் குறைவாகவே இருக்கிறார்கள். எனவே இறைவனுடைய பணிக்காக நம்முடைய பிள்ளைகளுக்காக ஜெபித்து அவர்களை இறை அழைத்தல் முகாமில் கலந்து கொள்ள வைக்க உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இது நம் அனைவருடைய தேவை என்ற ஒரு உணர்வோடு நீங்கள் இதற்காக ஜெபிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது பங்குகளில் அதிகமாக இறையழைத்தல் கிடைக்க ஒவ்வொருவரும் ஜெபிப்போம்.அன்னை மரியாளின் பரிந்துரையை நாடுவோம். இறைவன் உங்கள் அனைவருக்கும் நிறைவான ஆசி அளிப்பாராக.

ஈசோ மெசியாவில் அன்புடன்

ஆயர் இல்லம்
27.03.2026

✠ **ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்டம்

குறிப்பு : இச்சுற்றுமடலை மார்ச் 27,2026 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்டத்திலுள்ள ஆலயங்கள், நிறுவனங்கள் என அனைத்திலும் திருப்பலிக்கு பின் வாசிக்க வேண்டும்.